# ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ

ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು–560003

# KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD

Malleshwaram, Bengaluru-560003

## ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆಪತ್ರಿಕೆ 2022–23

### ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು

### SUBJECT: First Language - Tamil

**ಸಮಯ: 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷಗಳು** **ವಿಷಯ ಸಂಕೇತ: 10T**

**ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100**

## CCE-RF
## ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿಗಳಿಗೆ

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

[ Turn over

**I.** கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக : **6 × 1 = 6**

1. செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது

   (A) எதுகை

   (B) மோனை

   (C) இயைபு

   (D) முரண்

2. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல்

   (A) உழிஞை

   (B) காஞ்சி

   (C) வஞ்சி

   (D) வெட்சி

3. பொருளுடைய சொற்கள் பல அடுக்கி வருவது

   (A) அடுக்குத் தொடர்

   (B) இரட்டைக் கிளவி

   (C) பொருளுடைய தொடர்

   (D) சொற்றொடர்

4. நான்கு சீர்களைக் கொண்டது

(A) குறளடி

(B) சிந்தடி

(C) அளவடி

(D) நெடிலடி

5. கரை, திரவியம், குரை, மரை எனத் தொடங்கும் அடிகள் நான்கிலும்

(A) எதுகை உள்ளது

(B) மோனை உள்ளது

(C) முரண் உள்ளது

(D) அந்தாதி உள்ளது

6. 'வேய்' என்பதன் பொருள்

(A) மூங்கில்

(B) பாக்கு

(C) வேம்பு

(D) ஆல்

[ Turn over

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 4 × 1 = 4**

7. செப்பலோசை உடையது வெண்பா;

   அகவலோசை உடையது : .......................... .

8. இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி;

   மூன்று சீர்களைக் கொண்டது : .......................... .

9. தீயினால் சுட்டபுண் உள்ளாறும்;

   நாவினாற் சுட்டவடு : .......................... .

10. 'கம்பராமாயணம்' இயற்றியவர் கம்பர்;

    'பம்ப பாரதம்' இயற்றியவர் : .......................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 7 × 1 = 7**

11. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது ?

12. சாறு என்றும் பேறு என்றும் குறிக்கப்படுவது யாது ?

13. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

14. சீதை அனுமானிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

15. இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?

16. எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பவர் யார் ?

17. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

**IV.** மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : **10 × 2 = 20**

18. தாய், தந்தை மற்றும் கொல்லன் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார் வழி நின்று விளக்குக.

19. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?

20. பெண்கள் எவ்வாறு கும்மியடித்தனர் ?

21. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது ?

22. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

23. சைகாஸ் என்னும் தாவரங்களின் சிறப்பினை எழுதுக.

24. குழந்தைகள் எவ்வாறு பஸ்சுக்குள் போய் அடைந்ததாகக் கி. ராஜநாராயணன் கூறுகிறார் ?

25. இரட்டைக் கிளவியை சான்றுடன் விளக்குக.

26. அணி என்றால் என்ன ? அதன் வகைககள் யாவை ?

27. அடி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

[ Turn over

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 4 x 3 = 12**

28. அசோக வனத்தில் சீதை இருந்த நிலையை அனுமான் எவ்வாறு விளக்கினான் ?

29. நாமக்கல் கவிஞர் 'என்னுடைய நாடு' என்ற கவிதையில் கூறும் கருத்துக்களைக் குறித்து எழுதுக.

30. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல் எவ்வாறு இருக்கின்றது ?

31. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

**VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6**

32. திருக்குறள்

33. பாரதியார்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக : 1 × 3 = 3**

34. பிறிது மொழிதல் அணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **3 × 3 = 9**

35. ''கண்டனென் கற்பினுக்கு அணியை கண்களால்''

36. ''நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்

நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்''.

37. ''அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்து விடும்''.

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக :** **1 × 3 = 3**

38. ''ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்''.

*அல்லது*

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''.

**X. அடிபிறழாமல் எழுதுக :** **1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் உருவமே'' எனவரும் பாடல்

*அல்லது*

''பட்டங்கள் ஆள்வதும் ..... '' எனவரும் பாடல்

**XI.** எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : **2 × 4 = 8**

40. தீப்பெட்டி ஆபிஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி. ராஜநாராயணன் கூறுவன யாவை ?

41. 'சுற்றுச் சூழல் விழிப்புணர்வு' நம் முன்னோர்களிடம் இருந்ததைச் சான்றுடன் விளக்குக.

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக : 1 × 4 = 4**

42. ''காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது.
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

*அல்லது*

''மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியும் நாடு
மாநதியுள் வானதியே மல்திரு நாடு
உலகில் விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிகமும் ஓங்கிய சீர் நாடு''.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**(2 × 2 = 4) 1 × 4 = 4**

43. இந்திய நாடு அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் அவர்களுக்கு இணையான செல்வாக்கும் சமுதாய மதிப்பும் பெற்ற முடி சூடா மன்னர்களாக வாழ்ந்து மறைந்த வரலாற்று நாயகர்களின் வரிசையில் ஒருவராக வைத்துப் போற்றப்படுகின்றவர் ஆனந்தரங்கப் பிள்ளை. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தரங்க பிள்ளை பன்மொழி வல்லுநராக இருந்தாலும் தமிழின்பால் பேரன்பு கொண்டிருந்தவர். துய்ப்ளேக்கு நிகராகத் தமிழிலேயே ஆவணங்களில் கையெழுத்திட்ட இவர் முதல் முதலாகத் தமிழில் நாட் குறிப்பு எழுதிய சிறப்பிற்குரியவர். இருப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து இவரால் எழுதப்பட்ட

[ Turn over

நாட்குறிப்பின் வாயிலாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் அரசியல், வரலாறு, சமுதாயம், சமயம், வணிகம் ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ள முடிகின்றது.

வினாக்கள் :

a) ஆனந்தரங்கப் பிள்ளை ஆவணங்களில் யாருக்கு நிகராக தமிழில் கையொப்பம் இட்டார் ?

b) ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு வாயிலாக எவற்றை அறியலாம் ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. தொற்றுநோய் பரவலை விரைவாக தடுக்க, அரசாங்கத்தோடு தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டதைக் குறித்து உன் நண்பனுக்கு/தோழிக்கு கடிதம் எழுதுக.

*அல்லது*

நீ வாழும் பகுதியில் மருத்துவமனை அமைத்து தருமாறு நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக: 1 × 5 = 5**

45. ''தகவல் தொழில்நுட்ப முன்னேற்றமே சமுதாய முன்னேற்றம்''

*அல்லது*

''வீட்டு நலமே நாட்டு நலம்''